
வினா 2

பின்வரும் படத்தொடரின் அடிப்படையாகக் கொண்டு ***100 சொற்களுக்குக் குறையாமல்*** ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் உதவிச் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| உணவகம் | கால் இடறி |
| பணப்பை | வலியால் துடித்தாள் |
| குறும்புக்காரச் சிறுவன் | மருந்திட்டார் |
| சினமடைந்து | மனம் வருந்தினான் |

PRIMARY SCHOOL

PRELIMINARY EXAMINATION - 2015

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 6

Name : ______________________

Class : Primary

Date : ____________

Total Time for Booklets A and B: 1 hour 40 minutes

## Instructions to Candidates

Do not open this booklet until you are told to do so.

Follow all instructions carefully.

Answer all the questions.

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் *ஒன்றுக்கு மட்டும்* விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் மொத்தம் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

<u>வினா 1</u>

<u>*என்னால் மறக்க முடியாத ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம்*</u>

மேற்கண்ட தலைப்பில் <u>***100 சொற்களுக்குக் குறையாமல்***</u> ஒரு கட்டுரை / கதை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

- இப்பிறந்தநாள் கொண்டாட்டம் யாருடையது
- இக்கொண்டாட்டத்தில் என்ன நிகழ்ந்தது
- ஏன் இது ஒரு மறக்க முடியாத பிறந்தநாள் கொண்டாட்டமாக அமைந்தது
- இறுதியில் என்ன நடந்தது

P5 SA1
TESTPAPER 1

| |
|---|
| Q1 முதல் Q32 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு. |

**'அ' பிரிவு**

**A1 வேற்றுமை**

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6x2=12 மதிப்பெண்கள்)

| |
|---|
| ஒரு காட்டில் புலியும் முயலும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் (Q1)__________ புலி இரை தேடச் சென்றது. ஆனால் எங்கு தேடியும் அதற்கு உணவு கிடைக்கவில்லை. அவ்வேளையில் வேடன் ஒருவன் (Q2)__________ வீட்டின் அருகில் வேட்டையாடிக் கொண்டிருந்தான். (Q3)__________ கையில் ஒரு நீண்ட துப்பாக்கியும் இருந்தது. முயல் அவனுடைய கண்ணில் பட்டதால் (Q4)__________ குறி வைத்தான். ஆனால் முயலோ தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி, தன் நண்பன் (Q5)__________ வந்து சேர்ந்தது. எதுவும் கிடைக்காததாலும் பசி மயக்கம் அதிகரித்ததாலும் புலி வேறு வழியின்றி முயலைச் சாப்பிடத் தீர்மானித்தது! (Q6)__________ புலியின் திட்டம் புரிந்ததால், தந்திரமாக புலியை வேடன் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றது. வேடன் புலியைக் கண்டதும் உடனே அதைக் குறி வைத்துத் தாக்கினான். தன் நண்பனையே சாப்பிட நினைத்த புலிக்கு அது தான் தண்டனை! |

Q1
(1) காலையின்
(2) காலைக்கு
(3) காலையால்
(4) காலையில்

( )

Q2 (1) முயலின்
(2) முயலில்
(3) முயலுடன் ( )
(4) முயலிலிருந்து

Q3 (1) அவனை
(2) அவனது
(3) அவனிடம் ( )
(4) அவனுக்கு

Q4 (1) அதை
(2) அதற்கு
(3) அதனால் ( )
(4) அதனிடம்

Q5 (1) புலியை
(2) புலியால் ( )
(3) புலிக்கு
(4) புலியிடம்

Q6 (1) முயலுக்கு
(2) முயலை
(3) முயலுடைய ( )
(4) முயலிடமிருந்து

<u>A2 செய்யுள் / பழமொழி</u>

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6x2=12 மதிப்பெண்கள்)

Q7 தேடாது ____________ பாடாய் முடியும்.

(1) அழுக்கின்
(2) அழைக்கின்
(3) முடிக்கின் ( )
(4) அழிக்கின்

Q8 இளமையில் __________ முதுமையில் வறுமை.

(1) கல்வி
(2) படிப்பு
(3) உழைப்பு
(4) சோம்பல்

( )

Q9 கற்க கசடறக் கற்பவை __________
நிற்க அதற்குத் தக.

(1) அறிந்தபின்
(2) கற்றபின்
(3) சொன்னபின்
(4) கலந்தபின்

( )

Q10 காலத்தினால் செய்த __________ சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(1) நன்றி
(2) உதவி
(3) பண்பு
(4) நல்லொழுக்கம்

( )

Q11 உப்பிட்டவரை __________ நினை.

(1) நெஞ்சளவும்
(2) எள்ளளவும்
(3) உள்ளளவும்
(4) படியளவும்

( )

Q12 __________ ஆகாததும் ஆகும்.

(1) அறிவிருந்தால்
(2) பண்பிருந்தால்
(3) அன்பிருந்தால்
(4) நட்பிருந்தால்

( )

B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

வயதான ஒரு பெரும் பணக்காரர் மூன்று பிள்ளைகளுக்கும் தம் சொத்துகளைப் பிரித்துக்கொடுத்துவிட்டு, "கடைசி மகன் லிபான் மிகவும் சிறியவன். எனவே, அவன் பெரியவனாகும்வரை அவனது சொத்துகளைப் பாதுகாத்து அவனிடம் கொடுங்கள்", என்று கூறி இறந்துவிட்டார். பேராசை பிடித்த இருவரும் தம்பியின் சொத்தையும் தாங்களே அனுபவித்தனர்.

லிபான் பதினெட்டு வயதானதும், தன்னுடைய சொத்தைப் பிரித்துத் தரும்படி அண்ணன்களிடம் கேட்டான். ஆனால், அவ்விரண்டு அண்ணன்களோ, "உன்னிடம் சொத்தைப் பாதுகாக்கும் திறன் இருக்கின்றதா என்று நாங்கள் சோதிக்க வேண்டும். அதனால் சில நாள்கள் எங்கேயாவதுபோய் சம்பாதித்துவிட்டு வா," என்று கூறினர். அதற்கு இணங்கிய லிபான் வீட்டைவிட்டு வெளியேறினான்.

அளவுகடந்த பசியால் மயங்கி விழுந்த அவனை ஒரு பெரியவர் அழைத்துச் சென்று உணவளித்தார். அவனும் அவரோடு தங்கி வேலை செய்து வந்தான். இவ்வாறு இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர், தான் செய்து வந்த வேலைக்கான ஊதியத்தை லிபான் கேட்டான். "மகனே! உன்னைப்போல் ஒரு நல்ல பையன் எனக்குக் கிடைப்பது அரிது. உன் உழைப்புக்கு நான் நிறைய பணம் கொடுக்க வேண்டும். ஆனால், பணத்தினால் உனக்கு ஆபத்து வரும். ஆகையால், இந்த மூன்று சீதாப்பழங்களை உனக்கு மனமார கொடுக்க விரும்புகிறேன்", என்றார். "ஐயா! எனது அப்பாவைப் போல் இருந்து என்னைப் பாதுகாத்தீர்கள். நீங்கள் பிரியமில்லாமல் கொடுக்கும் பணம் எனக்கு வேண்டாம், ஆசையாகக் கொடுக்கும் இப்பழங்களே போதும்" என்று கூறிவிட்டு தன் அண்ணன்களைக் காணக் கிளம்பினான்.

லிபான் அண்ணன்களிடம் நடந்ததைக் கூறினான். அவன் கூறியதைக் கேட்ட அவனுடைய அண்ணன்கள் எரிச்சலடைந்து அவனை வீட்டைவிட்டு விரட்டினர். வீட்டைவிட்டு வெளியேறிய லிபான் கால்போன போக்கில் நடந்து ஒரு மரத்தடியில் அமர்ந்து தன் நிலைமையை எண்ணி அழ ஆரம்பித்தான். அதிகம் பசி எடுக்கவே ஒரு சீதாப்பழத்தை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினான். உடனே, அப்பழம் மிகப் பெரிதாகி அதிலிருந்து தங்கம், வெள்ளி, வைரம் போன்றவை கலகலவென்று கொட்ட ஆரம்பித்தன. திடுக்கிட்ட லிபான் அடுத்த பழத்தைக் கடித்தான். அதுவும் படபடவென்று வளர்ந்து வெடித்தது. அதற்குள் இருந்து அழகிய ரதமும் குதிரையும் வந்தன.

மூன்றாவது பழத்தையும் கடித்தான். அதுவும் வளர்ந்து வெடித்து, அதிலிருந்து ராஜகுமாரி வெளிவந்து லிபானின் கரத்தைப் பிடித்தாள். இருவரும் ஓர் அரண்மனையைக் கட்டிக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (5x2=10 மதிப்பெண்கள்)

Q13 இறக்கும் தருவாயில் இருந்த பெரியவர் என்ன செய்தார்?

(1) தன் மகன்களிடம் சொத்துகளைப் பற்றிப் பேசினார்
(2) பிள்ளைகளிடம் சொத்துகளை இரு பாகமாகப் பிரித்துக் கொடுத்தார்
(3) சொத்துகளை மூன்றாகப் பிரித்துத் தன் மகன்களிடம் ஒப்படைத்தார்
(4) சொத்து அனைத்தையும் பெரிய மகனிடம் ஒப்படைத்தார்

( )

Q14 அண்ணன்மார்கள் ஏன் லிபானை வீட்டைவிட்டு வெளியேற்றினர்?

(1) அவனுக்குப் புத்தி புகட்ட
(2) அவனைப் பணக்காரனாக்க
(3) அவனின் திறமையைச் சோதிக்க
(4) அவன் சொத்துகளை அபகரித்துக்கொள்ள

( )

Q15 லிபான் எப்படிப்பட்டவன் என்று பெரியவர் கருதினார்?

(1) அவன் ஒரு பெரிய ஏமாளி என்று
(2) அவன் ஒரு சிறந்த அறிவாளி என்று
(3) அவன் ஒரு சிறந்த உழைப்பாளி என்று
(4) அவன் ஒரு பெரிய பணக்காரன் என்று

( )

Q16 லிபான் ஏன் சீதாப்பழங்களே போதும் என்று கூறிச் சென்றான்?

(1) வழியில் பணம் பறிபோகும் என்பதால்
(2) அண்ணன்கள் பிடுங்கிக்கொள்வார்கள் என்பதால்
(3) பெரியவர் சம்பளம் கொடுக்கமுடியாது என்றதால் ( )
(4) பெரியவரின் சொல்லுக்கு மரியாதை கொடுத்ததால்

Q17 லிபானின் அழுகைக்குக் காரணம் என்ன?

(1) மிகவும் பசியாக இருந்ததால்
(2) தனக்கு யாரும் இல்லை என்பதால்
(3) தன் சொத்து தனக்குக் கிடைக்காததால் ( )
(4) அந்தப் பெரியவரைக் காணவில்லை என்பதால்

B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (3x2=6 மதிப்பெண்கள்)

Q18 இணங்கிய
(1) சம்மதித்த
(2) பாராட்டிய ( )
(3) பொறுப்பேற்ற
(4) கவலையடைந்த


Q19 ஊதியத்தை
(1) காசை
(2) சம்பளத்தை
(3) பணத்தை ( )
(4) செல்வத்தை

Q20 கிளம்பினான்
(1) நடந்தான்
(2) சென்றான்
(3) புறப்பட்டான் ( )
(4) வெளியேறினான்

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின் வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

கலை பாரதி இசை மற்றும் நடனப் பள்ளி
106 சிராங்கூன் சாலை
சிங்கப்பூர் 105106





பள்ளி மாணவர்களுக்குச் சலுகை !

ஜூன் 30-ஆம் தேதிக்குள் பதிவு செய்வோருக்கு 20% கழிவு வழங்கப்படும்.

மேல் விவரங்களுக்கு
www.kalaibharathi.com.sg
அல்லது
83053339 / 96793511

சேவைகள்

- சங்கீதம் (வாய்ப்பாட்டு), வீணை மீட்டுதல் மற்றும் கீபோர்ட் வாசித்தல்
- பரதநாட்டியம், மோகினியாட்டம், நாட்டுப்புற ஆட்டம் மற்றும் மேற்கத்திய நடனம்.
- வெள்ளிக்கிழமை மாலை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை நேரங்களில் வகுப்புகள் நடைபெறும்
- பதிவு செய்த ஒரே வாரத்தில் வகுப்பில் சேர்ந்துகொள்ளலாம்
- அனுபவம், திறமை வாய்ந்த நடன மற்றும் இசைக் கலைஞர்கள் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பார்கள்

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (3x2=6 மதிப்பெண்கள்)

Q21 என்னென்ன சேவைகளை கலை பாரதி இசை மற்றும் நடனப் பள்ளி வழங்குகிறது?

(1) மேற்கத்திய நடனம் மற்றும் சங்கீத வகுப்பு
(2) பரதநாட்டியம் மற்றும் பியானோ வகுப்பு ( )
(3) மோகினியாட்டம் மற்றும் தப்லா வகுப்பு
(4) நாட்டுப்புற பாடல் மற்றும் மேற்கத்திய நடன வகுப்பு

Q22. யாருக்கு 20% சலுகை வழங்கப்படும்?

(1) பாலர் பள்ளி மாணவர்களுக்கு மட்டும்
(2) ஜூன் மாதம் முடியும் முன் பதிவுசெய்வோருக்கு ( )
(3) பதிவு செய்துகொள்ளும் பள்ளி மாணவர்களுக்கு
(4) விடுமுறை காலத்தில் பதிவு செய்யும் பள்ளி மாணவர்களுக்கு

Q23. இசை மற்றும் நடன ஆசிரியர்கள் யார்?

(1) அனுபவம் மிக்க பள்ளி ஆசிரியர்கள் ( )
(2) தொலைக்காட்சி நடனக் கலைஞர்கள்
(3) திறன்மிக்க மற்றும் அனுபவம் வாய்ந்த கலைஞர்கள்
(4) இந்திய வாத்தியக் கருவிகளை நன்கு கற்ற ஆசிரியர்கள்

| |
|---|
| Q33 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது. |

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (5x2=10 மதிப்பெண்கள்)

Q24 தாயார் குழந்தையின் அருகே சென்றார். பின்னர், அதைப் பாசத்தோடு ________ முத்தம் கொடுத்தார். Q24 ( )

Q25 அந்த வினோத பறவையின் ________ பல நிறங்கள் கொண்டது. அதைப் பார்த்துப் பலரும் ஆச்சரியப்பட்டனர். Q25 ( )

Q26 ராஜா அந்த வீட்டில்தான் வாடகைக்கு இருக்கிறான். அதில் மூன்று ________ உள்ளன. Q26 ( )

Q27 நான் ஒரு சொல்லின் பொருளை ________ வேண்டும். ஆனால், அகராதியைக் காணவில்லை. Q27 ( )

Q28 என் தாயார் சமீபத்தில் ஒரு தம்பி பாப்பாவை பெற்றெடுத்தார். அவன் ________ மாதத்தில் பிறந்தவன். Q28 ( )

| | | | |
|---|---|---|---|
| (1) | அனைத்து | (2) | அழகு |
| (3) | அரிய | (4) | அறைகள் |
| (5) | அலகு | (6) | அறிய |
| (7) | அரைகள் | (8) | ஆணி |
| (9) | ஆனி | (10) | அணைத்து |

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.
(7x2=14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| அன்று ஞாயிற்றுக்கிழமை. வழக்கம்போல் (Q29)________ ஜெயா தன் தாயாருடன் பூங்காவுக்குச் சென்றாள். தாயார் பின்னால் வர அவள் சற்று முன்னால் நடந்தாள். அப்போது திடீரென எங்கிருந்தோ வந்த பூச்சாடி சிறுமியின் தோளை உரசிக் கீழே (Q30)________ உடைந்தது. ஜெயா (Q31)________ வலியாலும் பெருங்கூச்சலோடு கீழே விழுந்தாள். அவள் தாயாரும் மற்றவர்களும் அவளை நோக்கி ஓடி வர இன்னும் சிலர் பூச்சாடி வந்த மாடியைக் கண்டுபிடிக்க விரைந்தனர். நல்ல வேளை அவளது உயிருக்கு (Q32)________ ஏதும் இல்லை. மருத்துவ வண்டி அவளைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது. | Q29( )<br>Q30( )<br>Q31( )<br>Q32( ) |
| குற்றவாளியைத் தேடிச் சென்றவர்கள் ஒருவனைப் பிடித்திழுத்துக் கொண்டு வந்தார்கள். வீட்டில் நடந்த சண்டையில் (Q33)________ அடைந்து, சாடியைக் கீழே தூக்கி எறிந்ததாகக் கூறினான். எவ்வளவு (Q34)________ செயல் இது! கொஞ்சம் (Q35)________ அந்தக் குழந்தை தனது உயிரை அல்லவா இழந்திருக்கும். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்று நிரூபித்த அவனை காவலர்கள் விலங்கிட்டு அழைத்துச் செல்ல, கூடியிருந்த கூட்டம் கலைந்தது. | Q33( )<br>Q34( )<br>Q35( ) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | தைரியமான | (2) | அன்றும் | (3) | தவறியிருந்தால் |
| (4) | விழுந்து | (5) | பயத்தால் | (6) | ஆபத்து |
| (7) | பட்டிருந்தால் | (8) | பொறுப்பற்ற | (9) | பறந்து |
| (10) | கோபம் | (11) | அதிர்ச்சியாலும் | (12) | எரிச்சல் |

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஒரு நாள் சாலமன் மன்னன் காட்டுக்குச் சென்றான். காட்டில் வேட்டையாடும்போது, ஒரு வெள்ளை நாகமும் ஒரு கருநாகமும் சண்டையிட்டுக் கொள்வதைப் பார்த்தான். கருநாகம் தனது விஷத்தை வெள்ளைப் பாம்பின் மேல் செலுத்துவதற்காகப் போராடியது. சாலமனுக்கு வெள்ளை பாம்பின்மீது அனுதாபம் ஏற்பட்டதால் தன் வாளைக் கொண்டு அந்தக் கருநாகத்தை வெட்டிக் கொன்றான்.

சில நாள்கள் கழிந்தன. மீண்டும் சாலமன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார். அப்போது, அரக்கன் ஒருவன் திடீரென்று அவர்முன் தோன்றி, "மன்னா! உங்களால் காப்பாற்றப்பட்ட வெள்ளை பாம்புதான் நான். அந்தக் கருநாகமும் ஓர் அரக்கன்தான், எனது எதிரி. ஒரு நாள் அவன் என்னைத் தாக்க எண்ணினான். அப்போது நான் பாம்பாக மாறித் தப்பிக்கப் பார்த்தேன். ஆனால், அவன் கருநாகமாக மாறி என்னைத் துரத்தி, கொத்தி, விஷத்தை என்மீது செலுத்த முயன்றான். அப்போதுதான் நீங்கள் வந்தீர்கள் ", என்று தன் கதையைக் கூறி முடித்தான்.

அரக்கன் தொடர்ந்து பேசினான். " நீ எனக்கு செய்த உதவிக்காக நான் உனக்குப் பரிசளிக்க விரும்புகிறேன். உனக்குத் தேவையானது எது? "என்று வினவினான். நன்கு யோசித்த சாலமன் மன்னன், அரக்கனிடம் தனக்கு மங்காத அறிவு வேண்டும் என்று கேட்டான்.

அன்றிலிருந்து சாலமன், தனது நிகரற்ற அறிவால் எல்லோருக்கும் நீதி வழங்கி வந்தான். சாலமன் மன்னனிடம் மங்காத அறிவு மட்டும் இல்லை. அவனிடம் மிருகங்களிடமும் அரக்கர்களிடமும் பேசும் ஆற்றலும் இருந்தது. ஒரு நாள் அஷ்மெடாய் என்ற கொடூர மனம் படைத்த அரக்கன் ஒருவனை சாலமன் சந்தித்தான். அரக்கனின் குணம் அறியாது அவனிடம் சென்று, "எப்படி அரக்கர்களுக்கு மட்டும் சில சக்திகள் இருக்கின்றன? எனக்கும் அம்மாதிரியான சக்திகள் கிடைக்குமா? ", என்று மன்னன் கேட்டான்.

அரக்கனோ, " உன்னிடம் உள்ள மந்திர மோதிரத்தை என்னிடம் கொடு. உனக்கும் அச்சக்திகள்கிடைக்கும்படி செய்கிறேன்", என்றான். ஆனால், மோதிரம் தனக்குக் கிடைத்ததும் அதைக் கடலில் தூக்கி எறிந்து விட்டான்! அக்காட்சியைக் கண்ட மன்னன் மனம் உடைந்துபோனான். கடலின் அடிக்குச் சென்ற அந்த மோதிரத்தை மீன் ஒன்று விழுங்கியது.

அதன் பின்னர் வானம் அளவு வளர்ந்த அரக்கன் மன்னனை வாயில் போட்டு சிறிது நேரம் விழுங்கி, பின்னர் 400 மைல் தூரத்துக்கு அவனைத் துப்பினான். உயிர் பிழைத்த சாலமன் தன் பொருளையும் பட்டத்தையும் இழந்து ஊர் ஊராகத் திரிந்து,"அமோனைட்" என்ற நகரத்தை வந்தடைந்தான். அங்கே அந்நகரத்தின் மன்னனின் சமையலறையில் பணிபுரியும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டியது. ஒரு முறை, வாய்க்கு ருசியான விருந்தை தயார் செய்து மன்னனுக்கு வழங்கிய போது, மன்னன் அச்சுவைக்கு அடிமையாகி சாலமனையே தலைமை சமையற்காரனாக நியமித்தார்.

பல தினங்கள் அங்கேயே பணிபுரிந்த சாலமனை, மன்னனின் மகள் விரும்ப ஆரம்பித்தாள். இந்தச் செய்தியை அறிந்த அந்நகர மன்னன் சினங்கொண்டு அவர்கள் இருவரையும் பாலைவனம் ஒன்றிக்கு துரத்தினான்.வெகு தூரம் வெயிலில் அலைந்த அவர்கள் இருவரும் ஒரு மீன்பிடி கிராமத்தை அடைந்தனர். பசி வயிற்றைக் கிள்ளவே ஒரு மீனை வாங்கிச் சாப்பிட்டார்கள். என்ன ஆச்சரியம்! அந்த மீன் தான் சாலமன் மன்னனின் மோதிரத்தை விழுங்கிய மீன்! மந்திர மோதிரம் தன் கைக்கு வந்ததும் சாலமன் பழைய பலத்தையும், அறிவையும் தன் நாட்டையும் பெற்றான்.

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36) காட்டிற்கு வேட்டையாடச் சென்ற மன்னன் என்ன பார்த்தான்? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

37) சாலமன் மன்னன் எவ்வாறு நிகரற்ற அறிவைப் பெற்றான்? (4 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

38) மன்னனிடம் காணப்பட்ட ஆற்றல் என்ன? (2 மதிப்பெண்கள்)

39) கொடூர அரக்கன் மன்னனை எவ்வாறு துன்புறுத்தினான்?
(4 மதிப்பெண்கள்)

40) சாலமன் மன்னன் ஏன் தலைமை சமையற்காரனாக நியமிக்கப்பட்டான்?
(4 மதிப்பெண்கள்)

41) சாலமன் மன்னனுக்குத் தான் இழந்த நாடு மீண்டும் எப்படி கிடைத்தது?
(3 மதிப்பெண்கள்)

ஒரு காட்டில் புலியும் ...

## TESTPAPER 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 4 | 2) 1 | 3) 2 | 4) 1 | 5) 4 | 6) 1 |
| 7) 4 | 8) 4 | 9) 2 | 10) 1 | 11) 3 | 12) 3 |
| 13) 3 | 14) 4 | 15) 3 | 16) 4 | 17) 2 | 18) 1 |
| 19) 2 | 20) 3 | 21) 1 | 22) 2 | 23) 3 | 24) 10 |
| 25) 5 | 26) 4 | 27) 6 | 28) 9 | 29) 2 | 30) 4 |
| 31) 11 | 32) 6 | 33) 10 | 34) 8 | 35) 3 | |

36) காட்டிற்கு வேட்டையாடச் சென்ற மன்னன் ஒரு கருநாகம் தனது விஷத்தை ஒரு வெள்ளைப்பாம்பின் மேல் செலுத்த சண்டையிட்டுக் கொள்வதைப் பார்த்தான்.

37) சாலமன் மன்னன் வெள்ளைப்பாம்பாக இருந்த அரக்கனை அவனது எதிரியிடமிருந்து காப்பாற்றினான். அதற்குக் கைமாறாக அரக்கன் சாலமன் மன்னனுக்குப் பரிசளிக்க விரும்பினான். சாலமன் மன்னன் மங்காத அறிவை விரும்பியதால், அவன் நிகரற்ற அறிவைப் பெற்றான்.

38) மன்னனிடம் மிருங்கங்களிடமும் அரக்கர்களிடமும் பேசும் ஆற்றல் இருந்தது.

39) மந்திர மோதிரம் கிடைக்கப் பெற்ற கொடிய அரக்கன் அதைக் கடலில் தூக்கி எறிந்து விட்டான். மேலும் மன்னனை வாயில் போட்டு சிறிது நேரம் விழுங்கி, பின்னர் 400 மைல் தூரத்துக்கு அப்பால் அவனைத் துப்பினான்.இவ்வாறே கொடிய அரக்கன் மன்னனை துன்புறுத்தினான்.

40) ஒரு முறை சாலமன் மன்னன் வாய்க்கு ருசியான விருந்தை தயார் செய்து "அமோனைட்" நகர மன்னனுக்கு வழங்கினான். அந்நகர மன்னன் அச்சுவைக்கு அடிமையாகியதால் சாலமன் மன்னன் தலைமை சமையற்காரனாக நியமிக்கப்பட்டான்.

41) சாலமனுக்கும் மன்னனின் மகளுக்கும் பசித்ததால் அவர்கள் ஒரு மீனை வாங்கிச் சாப்பிட்டார்கள்.சாலமனின் மோதிரத்தை விழுங்கிய மீன் சாலமனின் கைக்கு வந்ததால் அவன் தனது பழைய பலத்தையும், அறிவையும் தான் இழந்த நாட்டையும் மீண்டும் பெற்றான்.